**OPEN ACCESS**

Manuscript ID: TAM-05032021-3507

Volume: 5

Issue: 3

Month: January

Year: 2021

P-ISSN: 2454-3993

E-ISSN: 2582-2810

Received: 28.10.2020

Accepted: 05.12.2020

Published: 01.01.2021

Citation:
Anandarajan, K. "Anciant Tamils Attitude towards Five Elements in Nature on the Basis of Purananuru." *Shanlax International Journal of Tamil Research*, vol. 5, no. 3, 2021, pp. 127–32.

DOI:
https://doi.org/10.34293/tamil.v5i3.3507

*Corresponding Author:
Madhunisha432015@gmail.com

This work is licensed under a Creative Commons Attribution-ShareAlike 4.0 International License

# Anciant Tamils Attitude towards Five Elements in Nature on the basis of Purananuru

**G. Anantharajan**
*Ph.D. Research Scholar*
*Tamil Research Center, The American College, Madurai, Tamil Nadu, India*
https://orcid.org/0000-0001-5960-4640

**Abstract** - Ancient Tamils feared natural disasters such as floods, wildfires and landslides and began to worship land, water, fire, air and sky to protect themselves. As an extension of this, the Five elements in nature are worshiped as deities named Varna Bhagavan, Vayu Bhagavan, Surya Bhagavan and Bhumadevi. Later, the ancient tamils, who knew that the world operated through the Five elements in nature. They began to refer the Five elements in nature as a metaphor for gift, mercy, valor, patience, and so on. In the Sangam literature the songs are recorded according to the imagination. The ancient people know the scientific messages from the atom to the universe.

**Key Words:** Sangam Literature, anciant tamils, five elements in nature, landscape

**References**

1. Thevaneyap paavanaar, Senthamil Sorpirappiyal Peragaramuthali, Part II, P.529.
2. Subramaniyan (P.A.,) Divagara nigandu Part 1, No. 1640
3. Kathiraivel Pillai, Tamilsolagarathi, Part – III, P.1558.
4. Ibid. Part – II, P.279
5. Pathittrupathu, Poem, No: 24, Line. 15
6. Paripaadal. Poem, No: 3, Line. 4.
7. Maduraikaanchi, Line, 453-454.
8. Purananooru, Poem No: 2, Line, 1-6.
9. Ibid. Poem, No: 30, Line, 1-7.
10. Ibid. Poem, No: 192, Line, 7-9.
11. Ibid. Poem, No: 35, Line, 1-3.
12. Ibid. Poem, No: 70, Line, 6-10.
13. Ibid. Poem, No: 38, Line, 1-6.

# புறநானூறு காட்சிப்படுத்தும் பழந்தமிழர்களின் பூதவியல்சார் சிந்தனைகள்

*க. ஆனந்தராஜன்*
முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ் உயராய்வு மையம்
அமெரிக்கன் கல்லூரி, மதுரை

***ஆய்வுச் சுருக்கம்:*** *ஆதிகாலத் தமிழர்கள் வெள்ளம், காட்டுத் தீ, நிலச்சரிவு போன்ற இயற்கைப் பேரிடர்களின் போது அஞ்சி, தம்மை தற்காத்துக் காத்துக்கொள்ள நிலம், நீர், தீ, காற்று, ஆகாயத்தை வழிபடத் தொடங்கியுள்ளனர். அதன் நீட்சியாகவே ஐம்பூதங்களை வர்ண பகவான், வாயு பகவான், சூரிய பகவான், பூமாதேவி எனப் பெயரிட்டு தெய்வங்களாக வழிபட்டுள்ளனர். ஐம்பூதங்களின் வாயிலாகவே இவ்வுலகு இயங்குகிறது என்பதை அறிந்த பழந்தமிழர்கள் கொடை, கருணை, வீரம், பொறுமை முதலானவற்றிற்கு உவமையாக ஐம்பூதங்களைக் குறிப்பிட்டனர். சங்க இலக்கியத்தில் ஐம்பூதங்கள் புலவர்களின் கற்பனை ஆற்றலுக்கேற்பப் பதிவுசெய்யப்பட்டுள்ளன. புறநானூற்றில் மன்னர்களைப் பற்றி புகழுமிடங்களில் ஐம்பூதங்களையும் கொண்டு பாடியுள்ளனர். அணு முதல் அண்டம் வரையிலான அறிவியல் செய்திகளைப் பழந்தமிழர்கள் அறிந்திருந்தனர். விண்ணும் மண்ணும் நீரும் நெருப்பும் காற்றும் ஆகிய ஐம்பூதங்களின் சேர்க்கையே உலகம் என்பதைச் சங்க காலத் தமிழர்கள் உணர்ந்திருந்தனர்.*

***முக்கியச் சொற்கள்:*** *தமிழ்ச் செவ்விலக்கியம், சங்க இலக்கியம், புறநானூறு, ஐம்பூதங்கள்.*

## தொடக்கமாக

ஒரு சமூகத்தின் பண்பட்ட வளர்ச்சியை அச்சமூகத்தின் கலை, இலக்கியம், பண்பாடு முதலான கூறுகள் வெளிக்காட்டுகின்றன. இக்கூறுகளின் வழியே அச்சமூக மக்களின் அறிதல்சார் அறிவுத்திறன்களை அறிந்து கொள்ள முடிகிறது. ஆறிதல்சார் அறிவுத் திறன் என்பது காரண காரியங்களை ஆராய்ந்தறிகின்ற அறிதிறன்களைக் குறிக்கும். பழந்தமிழர் அறிதல் சார்ந்த பல்வேறான திறன்களை பெற்றிருந்தனர். அவற்றுள், ஐம்பூதங்கள் பற்றிய சிந்தனையைப் பழந்தமிழர்கள் அறிந்திருந்தார்களெனப் பழந்தமிழ் இலக்கியங்கள் வாயிலாக அறிய முடிகிறது. அணு முதல் அண்டம் வரையிலான அறிவியல் செய்திகளைப் பழந்தமிழர்கள் அறிந்திருந்தனர். விண்ணும் மண்ணும் நீரும் நெருப்பும் காற்றும் ஆகிய ஐம்பூதங்களின் சேர்க்கையே உலகம் என்பதை சங்க காலத் தமிழர்கள் உணர்ந்திருந்தனர். பூதவியல் எனும் இயற்பியல், வேளாண்மை அறிவியல், வேதியியல் அறிவியல் போன்றவற்றையும் சங்ககாலத் தமிழர்கள் அறிந்திருந்ததைச் சங்க காலத் தமிழ்ப் புலவர்கள் வழி காணலாகிறது. இயற்கையாகக் கருதப்பட்ட ஐம்பூதங்கள் மக்களின் அன்றாட வாழ்வோடு கொண்டிருந்த தொடர்பை விளக்குவதாகவும் ஐம்பூதங்களின் இயல்புகளை விளக்குவதாகவும் இக்கட்டுரை அமைகிறது.

## பூதம் - விளக்கம்

பூதம் என்னும் தமிழ்ச்சொல் பூ, பூத்தல் என்னும் வேர்ச் சொல்லை அடியாகக் கொண்டு தோன்றியது. “பூத்தல் - தோன்றுதல், பூ - பூது - பூதம் - தோன்றியது”[1] என்று

பாவணர் சான்று காட்டி விளக்கியுள்ளார். இவ்விரு வேர்ச்சொற்களும் தோன்றுதல் என்ற பொருளையே தருகின்றன. திவாகர நிகண்டு பூத்தல் என்னும் சொல் உண்டாதல் என்னும் பொருளுடையது என்று, "பூத்தலும் பயத்தலும் உண்டாதற் பொருள" என்னும் நூற்பாவில் சுட்டுகிறது. பூதத்திலிருந்தே உலகும் உலகிலுள்ள பொருட்களும் தோற்றம் பெற்றன என்பதை அறிய முடிகிறது. பொருட்கள் தோன்றுவதற்குப் பூதமே மூலக்காரணியாக அமைகிறது என்பது புலனாகிறது. பூதங்கள் பொருட்கள் தோன்றுவதற்கு அடிப்படையாகவும் அவற்றினால் தோன்றிய பொருட்களின் பண்புகளாகவும் விளங்குகின்றன. அவை, கண்களால் காண்பதற்குரியனவாகவும் புலன்களால் உணர்ந்துகொள்ளக் கூடியனவாகவும் அமையப்பெற்றுள்ளன.

## பூதம் - சொற்பொருள் விளக்கம்

பூதம் என்னும் சொல்லிற்கு அகராதிகள் பல பொருள்களைத் தருகின்றன. தமிழ்ச் சொல்லகராதி பூதம் என்னும் சொல்லிற்கு "ஆல், இறந்த காலம், உயிர், ஐம்பூதம், ஐவகை யாகத்தில் ஒன்று, ஒரு தந்திரம், கமுகு, கூந்தற்பனை, சங்கு, சடாமாஞ்சில், சுத்தம், தருப்பை, நரகம்"[3] முதலான பொருள்களைக் கூறுகிறது. மதுரைத் தமிழ்ப் பேரகராதி "ஆல், இறந்த காலம், உண்மை, உயிர், ஐம்பூதம், கிடக்கும் பொருள், சங்கு, இருப்பு, பூதகணம், பரணி, பேய், உடம்பு, உயிர்வா்க்கம்"[4] ஆகிய பொருள்களைத் தருகிறது.

## ஐம்பூதங்கள்

வானம் (விசும்பு, ஆகாயம்) வளி, தீ, நீர், நிலம் என்னும் இவ்வைந்து இயற்கை மூலங்களே ஐம்பூதங்களாகும். பூதங்களின் எண்ணிக்கைத் தொடர்பாக இரு வேறுபட்ட கருத்துகள் நிலவுகின்றன. தமிழர்கள் பூதங்கள் ஐந்து என்ற கொள்கையைக் கொண்டிருந்தனர். வடநாட்டார் பூதங்கள் நான்கு என்ற கொள்கையைப் பின்பற்றி வளி, தீ, நீர், நிலம், என்னும் நான்கு தனிமங்களையே பூதங்களாக ஏற்றனர். வானம் உணர முடியாத தன்மையைக் கொண்டிருத்தலால் அதனை அவர்கள் பூதமாக ஏற்கவில்லை. வானம் ஏனைய பூதங்கள் நான்கும் தோன்றுவதற்குக் களமாக அமைவதால் தமிழர்கள் வானத்தையும் ஒரு பூதமாக ஏற்று பூதங்கள் ஐந்து என்ற கொள்கையைப் பின்பற்றினர். இக்கருத்திற்கு அரண் சேர்க்கும் வகையில் தமிழ் இலக்கியங்களும் பூதங்கள் ஐந்து என்பதையே குறிக்கின்றன.

தமிழ் இலக்கியங்களில் காலத்தால் முற்பட்டது என்று போற்றப்படும் சங்க இலக்கியங்கள் பூதங்கள் ஐந்து என்றே கூறுகின்றன.

**"நீர்நிலம் தீவளி விசும்போ டைந்தும்"[5] என்று பதிற்றுப்பத்து ஐம்பூதங்களின் எண்ணிக்கையை எடுத்துரைக்கிறது. "தீவளி விசும்பு நிலன்நீர் ஐந்தும்"[6] என்று பரிபாடலும், "நீரு நிலனும் தீயும் வளியும் மாக விசும்போ டைந்து"[7] என்று மதுரைக்காஞ்சியும் குறிப்பிடுகின்றன.**

பழந்தமிழர்கள் ஐம்பூதங்களின் இன்றியமையாமையைத் தங்கள் அனுபவத்தின் ஊடாக உணர்ந்து அவற்றைப் போற்றி வந்துள்ளனர். அளவிடற்கரிய ஆற்றலையும் பூதங்களின் விளைவுகளைக் கண்டு அஞ்சியவர்கள் அவற்றை இறைத்தன்மையுடையதாகக் கருதிப் போற்றி வணங்கினர். அறிதல் திறன் கொண்டு நுணுகி ஆராய்ந்தவர்கள் ஐம்பூதங்கள், இயல்புத்தன்மையுடைய இயற்கையின் ஆற்றல் என்னும் உண்மையை உணர்ந்தனர். ஐம்பூதங்கள் தொடர்பான இவ்விரு கருத்து நிலைகளும் சங்க இலக்கியங்களில் இடம்பெற்றுள்ளன.

**ஐம்பூதங்களின் இயல்பு**

இயல்பு என்பது ஒரு பொருளின் இயற்கைத் தன்மையைக் குறிக்கும். பூதங்கள் ஒவ்வொன்றும் தனித்தனிப் பண்புகளைப் பெற்றுள்ளன. இப்பண்புகள் ஒன்றோடொன்று முரண்பட்ட தன்மையைக் கொண்டிருக்கின்றன. இத்தகு முரண்பட்ட பண்புகள் உலகில் ஒன்றிணைந்துச் செயலாற்றுகின்றன. இது பூதங்களின் இயல்புத்தன்மையாகும். பூதங்களின் இந்த இயல்புத்தன்மை உலகின் இயற்கையாக அமைகிறது. பூதங்களின் தன்மையினை,

**"மண்டிணித்த நிலனும்
நிலனேந்திய விசும்பும்
விசும்பு தைவரு வளியும்
வளிதலைஇய தீயும்
தீமுரணிய நீரு மென்றாங்கு
ஐம்பெரும் பூதத் தியற்கை"**[8]

எனும் புறநானூற்று அடிகள் சுட்டி விளக்குகின்றன. நிலம் அணுக்களால் இருகத் திணிக்கப்பட்டுள்ளது. இந்நிலத் திற்கு மேலே காட்சியளிக்கும் வானம் விரிந்து பரந்து விளங்குகிறது. வானில் வலம் வருகின்ற காற்றின் துணையால் தீயானது வலிமையைப் பெறுகிறது. இத்தகைய தீயின் பண்பாகிய வெம்மைத் தன்மையோடு மாறுபட்டது நீரின் குளிர்ச்சித்தன்மை. பூதங்களின் இயற்பண்புகள் ஒன்றோடொன்று தொடர்பற்றதாக விளக்கப்பட்டுள்ளன. முரண்பாடுகளைக் கொண்டிருக்கும் பூதங்கள் உலகில் ஒன்றிணைந்து இயங்குகின்றன. இத்தகைய ஐம்பூதங்கள் அளவிடற்கரிய தன்மையைப் பெற்றிருக்கின்றன. அளவிடற்கரிய பூதங்களின் இயக்கநிலையைப் பற்றி,

**"செஞ்ஞாயிற்றுச் செலவுமஞ் ஞாயிற்றுப்
பரிப்பும் பரிப்புச் சூழ்ந்த மண்டிலமும்
வளிதிரிதரு திசையும்
வறிது நிலைஇய காயமு மென்றிவை
சென்றளந் தறிந்தோர் போல வென்றும்
இனைத்தென் போரு முளரே"**[9]

என்று புறநானூறு குறிப்பிடுகிறது. ஞாயிற்றின் இயக்கம், அதன் மண்டிலம், காற்றின் இயக்கம், வெட்டவெளியான ஆகாயம் ஆகியவற்றின் இயல்பு (அளவு) இதுவென்று ஆராய்ந்துக் கூறும் கல்வியை உடையவர் என்பது மேற்கண்ட பாடலின் பொருள். ஆராய்ந்து சொல்லும் கல்வியை உடையவர் என்பது ஐம்பூதங்களைப் பற்றிய கல்வியைக் கற்றவர்களையேக் குறிக்கிறது. பூதங்களின் இயல்புநிலை, இயக்கநிலை ஆகியவற்றை விளக்கும் கல்வி அக்காலங்களில் கற்கவும் கற்பிக்கவும்கூடிய ஒன்றாக, ஒரு கலையாகத் திகழ்ந்துள்ளது என்பது தெளிவாகிறது.

**புறநானூற்றில் பழந்தமிழர்களின் பூதவியல் சிந்தனை**

புறநானூறு தமிழர்களின் வரலாறு, பண்பாட்டை விளக்கும் நூலாகும். புறநானூற்றில் பல உயர்ந்த உண்மைகள் இடம்பெற்றுள்ளன.

புறநானூற்றில் நீரின் விசையைக் கணித்து அதனை உவமையாக்கி விதியின் செயலை உணர்த்துகிறார் கணியன்பூங்குன்றனார்.

**"வானம் தண்துளி தலைஇ ஆனாது
கல்பொருது இரங்கும் மல்லற் பேர்யாற்று
நீர்வழிப் படூஉம் புனைபோல"**[10]

***(புறநானூறு,பாடல் எண்192, அடிகள் 7-9)***

மழை பெய்து பெருகியோடும் பெரிய ஆற்றில் நீர் வழியே செல்லும் தெப்பம் போல உயிர்களை ஊழ்வினைப்படி அவற்றுக்கு ஏற்ற நிலையை அடையும் என்ற கருத்தைக் கூறுவதற்கு இரண்டு பூதங்களை உவமையாக்கிக் கூறியுள்ளார் புலவர்.

### நாட்டின் வளம்

தமிழ்நாட்டின் வளமையை விளக்க நீர்ப்பூதம், வானபூதம், நிலபூதம் ஆகியன பயன்பட்டுள்ளன. வெள்ளக்குடி நாகனார் என்றப் புலவர் நாட்டின் வளமையை,

**"நளியிரு முந்நீர் ஏணி யாக**
**வளியிடை வழங்கா வானம் சூடிய**
**மண்திணி கிடக்கைத் தண்டமிழ்க் கிழவா"[11]**
***(புறநானூறு, பாடல் எண்35, அடிகள் 1–3)***

எனக் கூறும் பாடல் வரிகள் நீர்செறிந்த பெரிய கடலினை எல்லையாகக்கொண்ட, காற்று ஊடுபோகாதவாறு வானத்தை உடைய, மண்செறிந்த நிலத்தை ஊடையது மூவேந்தர்களின் நிலம் என வளமைக்கு வானம், நீர், நிலம் ஆகியவற்றின் மூலம் பதிவு செய்துள்ளார்.

### கொடைத்திறம்

சோழன் குளமுற்றுத்துத் துஞ்சிய கிள்ளிவளவனின் கொடைத்திறத்தைக் கோவூர்கிழார் பாராட்டும்போது நீரை உவமையாக்கியுள்ளார். தீயை ஒப்புமையாக்கிப் பகைபுலம் கெடுவதைச் சுட்டியுள்ளார்.

**"தைத்திங்கள் தண்கயம் போலக்**
**கொளக்கொளக் குறைபடாக் கூழுடை வியனகர்**
**அடுதீ அல்லது சுடுதீ அறியாது**
**இருமருந்து விளைக்கும் நன்னாட்டுப் பொருநன்"[12]**
***(புறநானூறு, பாடல் எண்70, அடிகள் 6–10)***

தைமாதம் குளிர்ந்த குளம் போலக் கொடுக்கக் கொடுக்கக் குறையாது சோறு நிறைந்த நாடு. அந்நாட்டின் தலைவனின் பகைவனுடைய நாடு பாழாகும். அத்தகைய மன்னனது கொடை தப்பாது எனக் கூறிப் பாகனை ஆற்றுப்படுத்துகிறார். இங்ஙனம் கயம் என்னும் நீர்நிலை உவமையாகக் கையாளப்பட்டுள்ளது. அடுப்புத் தீ மட்டுமே காணும் அவ்வூரில் பகைவரால் மூட்டப்படும் தீ கிடையாது என நெருப்புப் பூதம் பற்றியும் கூறியுள்ளார். இவ்வாறாக நாட்டின் சிறப்புகளையும் வீரத்தையும் புகழுமிடங்களில் ஐம்பூதங்களை உவமையாகச் சங்க காலப் புலவர்கள் வெளிக்காட்டியுள்ளனர்.

### வாழ்த்தியல்

மன்னர்களின் கொடை, வீரம், நாட்டின் இயற்கை வளம், போர்த் திறம் போன்றவைகளைக் கூறுவதற்கு ஐம்பூதங்களை சங்கப் புலவர்கள் பயன்படுத்தியுள்ளனர். சேரமான் பெருஞ்சோற்று உதியஞ்சேரலாதனை வாழ்த்திக் கூறுமிடத்து,

**"மண் திணித்த நிலனும்,**
**நிலம் ஏந்திய விசும்பும்,**
**விசும்பு தைவரு வளியும்,**
**வளித் தலைஇய தீயும்,**
**தீ முரணிய நீரும்,என்றாங்கு**
**ஐம் பெரும் புதத்து இயற்கை போல**
**போற்றார்ப் பொருத்தலும், சூழ்ச்சியது அகலமும்**
**வலியும்,தெறலும்,அணியும்**
**உடையோய்..."[13]**
***(புறநானூறு, பாடல் எண்38, அடிகள் 1–8)***

நிலம் போல் பொறுமை, வானம் போல் சூழ்திறன், காற்றைப் போல் வலிமை, தீயைப் போல் எரிக்கும் திறன் (பகைவரை), நீரைப் போல் அளிக்கும் கொடைத் திறன்கொண்டவன் என முரஞ்சியூர் முடிநாகராய புலவர் பாடியுள்ளார்.

### முடிவாக

ஐம்பூதங்களின் சேர்க்கையே உலகமாகும். பூதங்களை மையங்கொண்டே உயிரினங்கள் இயங்கி வருகின்றன. தொடக்ககாலத்தில் இயற்கையைக் கண்டுவணங்கிய மனித சமூகமானது காலப்போக்கில் ஐம்பூதங்களான நீர், நிலம், காற்று போன்றவற்றிற்குத் தீங்கு

நிகழ்த்தத் தொடங்கிவிட்டனர். புதங்களை மையமாகக்கொண்டு இயங்கிவரும் உலகமானது மனிதர்களின் அறியாமையாலும் காழ்ப்பினாலும் பூதவியல் தன்மையை இழந்து வருகின்றது. அதன் சுவடுகள் இலக்கியங்களின் வாயிலாக நிலை கொண்டுள்ளது. சங்க இலக்கியத்தில் அறிவியல்சார் பூதவியல் சிந்தனைகளை ஆதித் தமிழர்கள் பெற்றிருக்கிந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## அடிக்குறிப்பு பட்டியல்

1. தேவநேயப் பாவணார',செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் பேரகர முதலி, இரண்டாம் பாகம், ப.529.
2. ச.வே.சுப்பிரமணியன் (ப.ஆ.,) திவாகர நிகண்டு தொகுதி 1, நூற்பா. 1640.
3. கதிரைவேல் பிள்ளை, தமிழ்ச் சொல்லகராதி, மூன்றாம் பாகம், ப.1558.
4. முந்நூல், இரண்டாம் பாகம், ப.279.
5. பதிற்றுப்பத்து, பா. எண்.24, அடி.15.
6. பரிபாடல், பா. எண்.3, அடி.4.
7. மதுரைக்காஞ்சி, அடிகள். 453-454.
8. புறநானூறு, பா.எண்.2, அடிகள்.1-6.
9. முந்நூல், பா.எண்.30, அடிகள்.1-7.
10. முந்நூல், பா.எண்.192, அடிகள்.7-9.
11. முந்நூல், பா.எண்.35, அடிகள்.1-3.
12. முந்நூல், பா.எண்.70, அடிகள்.6-10.
13. முந்நூல், பா.எண்.38, அடிகள்.1-6.